**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா**. 21**
**Defence**
**Court**

Name : பரமசிவம்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 17.03.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில், கூளக்கடை பஜாரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.18, 19 என் மருமகன்கள் ஆவர். என் மருமகன் கடையில் நான் வடை மாஸ்டராக இருந்தேன். இவ்வழக்கின் எதிரிகள் யாரையும் தெரியாது. குமார்பாண்டியனின் சகோதரர்கள் சக்திபாண்டியன், சேகர், செந்தில் ஆகியோரை தெரியாது. நான் எப்போது காலை 4.00 மணிக்கு சென்று சரக்கு போட ஆரம்பிப்பேன். சண்முகவேலும், சுப்பிரமணியனும் காலை 6.00 மணிக்கு மேல் கடைக்கு வருவார்கள். நான் கடையை திறந்து கடையில் இருக்கும் போது அவர்கள் கடைக்கு வருவார்கள் பின்னர் நான் சரக்கு போடும் இடத்திற்கு செல்வேன். சரக்கு போடும் இடத்திற்கும் கடைக்கும் இடையே நான்கு அல்லது ஐந்து வீடுகள்

இருக்கும் ஆனால் தெருவை சுற்றித்தான் வரமுடியும். என் மருமகன் இருவரும் கடை முன்பு தகராறு நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லி கடையை பூட்டிவிட்டு என்னையும் அழைத்து சென்றார்கள். காலை 9.30 மணியளவில் என்னை அவ்வாறு அழைத்து சென்றார்கள். எனக்கு இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரனையின் போது நான் தென்காசி கூளக்கடை பஜார் எல்.ஆர்.எஸ் பாளையம் சந்திப்பில் நானும், என் மருமகன்கள் இருவரும் டீக்கடை நடத்தி வருவதாகவும், நான் வடை மாஸ்டராக அங்கு வேலை செய்வதாகவும் எங்கள் ஊரில் 17.12.2006ம் தேதி குமார்பாண்டியன் என்பவர் கொலை செய்யப்பட்டதால் அது தொடர்பாக இருதரப்பினருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றும், என் மருமகன்கள் டீக்கடைக்கு டீ குடிக்க வரும் நபர்கள் அது சம்மந்தமாக பேசிக்கொண்டிருப்பார்கள் என்றும் கூறியிருக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கம் போல 14.8.2007ம் தேதி காலையில் சுமார் 10.15 மணிக்கு என் கடைக்கு வெளியே முத்தாரம்மன் கோவில் தென்புறம் சத்தம் கேட்ட போது நான் எட்டி பார்த்தேன் என்றும் அப்போது ஒரு அம்பாசிட்டர் காரும், ஒரு இருச்சக்கர வாகனமும் கீழே கிடந்தது என்றும், அப்போது TN 76 B 9529, TN 76 D 4974 என்ற இரண்டு ஆட்டோக்களில் சிலர் வந்து இறங்கினார்கள் என்றும், அவர்களில் நாகூர் ஹனிபா, முருகேசன் என்ற அப்துல்லா, பஷீர், அபு ஆயூப் அன்சாரி, ராஜா முகமது, சையது அலி, மீரான் மைதீன், நவாப், நாகூர் மீரான், சுலைமான் சேட், ஆகியோர் ஆயுதங்களுடன் இறங்கி சக்திபாண்டியுடன் வந்தவர்களை தாக்க முற்பட்டனர் என்றும், அவர்கள் கிழக்கு பார்த்து ஓடிய போது வி.டி.எஸ் குடோனுக்கு உள்ள சந்திலிருந்து சம்சுதீன், பஷிலுதீன், மீரான் மைதீன், மேசாக், ஆகியோர் அருவாள், கத்தியுடன் வழி மறித்து சக்திபாண்டியன் மற்றும் அவருடன் வந்தவர்களை விரட்டி வந்தனர் என்றும், சக்திபாண்டியன், சுரேஷ், சேகர் மற்றும் அவர்களது கூட்டாளிகள் நாகூர் ஹனிபா கூட்டாளிகளுடன் கூளக்கடை கடை வீதியில் எல். ஆர்.எஸ் பாளையம் சந்திப்பில் ஒருவரை யொருவர் வெட்டி காயப்படுத்திகொண்டனர் என்றும், அதில் செந்தில்குமாரை அலாவூதின் தலையில் வெட்டினார்ள ன்றும், நவாப் வயிற்றில் வெட்டினார்ள ன்றும், சுலைமான் சேட்

தோள்பட்டையில் வெட்டினார்என்றும், நாகூர் மீரான் இடது கையில் வெட்டினார் என்றும், அவருடன் வந்திருந்த சுரேசை பஷீர் வலது மணிக்கட்டில் வெட்டினார் என்றும், சையது அலி முகப்பில் வெட்டினார் என்றும் ஹனிபா என்ற நாகூர் ஹனிபா சேகரை தலையில் வெட்டினார் என்றும், அப்துல்லா வலது முழஙகையில் வெட்டினார் என்றும், அசன் கனி வலது கையில் கத்தியால் குத்தினார் என்றும், அபு அயூப் அன்சாரி வலது காதுக்கு கீழ் வெட்டினார் என்றும், சம்பவ இடத்தில் சுரேஷ், சேகர், அசன்கனி, ஆகியோர் இறந்து போனார்கள் என்றும் செந்திலையும், காயம் பட்டவர்களையும் மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால், சரியல்ல. செந்தில் என் நணபர் என்று சொன்னால் சரியல்ல. அவரை பார்க்க நானும், பூக்கடை ரமேசும், பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றும் சொன்னால், சரியல்ல. அங்கு வைத்து களக்காடு போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால், சரியல்ல. இறந்த போன சேகரின் உடலை என் கடையின் முன்பாக கைப்பற்றியதாக நான் எதையும் கேள்விபடவில்லை. சேகர் மற்றும் சுரேஷின் பிரேத விசாரணையின் போது நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் 14.8.2007 ம் காலை 10.15 மணிக்கு கடையில் இருந்த போது தான் சம்பவம் நடந்தது என்றும் எனக்கு எதிரிகளையும், இறந்து போன சேகரையும், சக்திபாண்டியனையும் தெரியும் என்றும் இவ்வழக்கிற்காக வேண்டுமென்றே சம்பவம் பற்றி தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. என்னை சுப்பிரமணியும், சண்முகவேலும் சேர்ந்து வந்து தான் அழைத்து சென்றார்கள். கடைக்கு முன்பு தகராறு நடப்பதாக கூறி என்னை அழைத்து சென்றார்கள். சுமார் ஒரு வாரம் கழித்து தான் கடையை திறந்தோம். என் மருமகன்கள் இருவரும் கடை திறக்க போறோம் வாருங்கள் என்று அழைத்த பின்பு தான் கடைக்கு சென்றேன். சம்பவத்தின் காரணமாக தான் கடையை அடைத்தோம். நான் எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**